## பெருநகர சென்னை மாநகராட்சி
## செய்தி வெளியீடு

**செ. வெ. எண்: 143** **நாள் : 26.10.2017**

### பெருநகர சென்னை மாநகராட்சியின் வரிவசூல் கடந்த ஆண்டைவிட கூடுதலாக வசூல் செய்யப்பட்டுள்ளது என பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர்.தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

சென்னை மாநகர முனிசிபல் சட்டம் 1919 பிரிவு 104ன்படி, சொத்து மற்றும் தொழில் வரி முதலியன ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் 1 முதல் செப்டம்பர் வரை முதல் அரையாண்டாகவும், அக்டோபர் முதல் அடுத்த ஆண்டு மார்ச் வரை இரண்டாம் அரையாண்டாகவும் கணக்கீடு செய்யப்பட்டு வரிவசூல் செய்யப்பட்டு வருகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சியில் சொத்துவரியினை அறிவிப்பு செய்த முதல் 15 நாட்களுக்குள் அபராதம் இல்லாமல் செலுத்தலாம். தவறியவர்கள் அபராதத்துடன் செலுத்தப்பட வேண்டும். பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொத்து வரியினை காசோலை அல்லது கேட்பு வரைவோலையாக வருவாய் அலுவலர், சென்னை மாநகராட்சி என்ற பெயரில் மட்டுமே பெறப்பட்டு வருகிறது.

அதனடிப்படையில், 2017–2018ம் நிதியாண்டின் முதல் அரையாண்டில் பெருநகர சென்னை மாநகராட்சி வருவாய் துறை மூலமாக சொத்துவரியாக ரூ.366.04 கோடி மற்றும் தொழில் வரியாக ரூ.157.44 கோடி என மொத்தம் ரூ.523.48 கோடி வசூல் செய்யப்பட்டுள்ளது. முந்தைய நிதியாண்டின் முதல் அரையாண்டில் ( I / 2016–2017) மேற்கொள்ளப்பட்ட வசூலை விட சொத்து வரியில் ரூ.57.25 கோடியும், தொழில் வரியில் ரூ.25.07 கோடியும் என மொத்தம் ரூ.82.32 கோடி கூடுதலாக வரிவசூல் செய்யப்பட்டுள்ளது.

பொதுமக்கள் சொத்து மற்றும் தொழில் வரி தொடர்பான கேள்விகள் / புகார்கள் / பரிந்துரைகள் ஆகியவற்றை 1913 என்ற கட்டணமில்லா தொலைபேசி எண் வாயிலாகவும், www.chennaicorporation.gov.in என்ற இணையதள முகவரியின் வாயிலாகவும் தெரிவிக்கலாம். மேலும், சொத்து மற்றும் தொழில் வரியை செலுத்தாதவர்கள் உடனே செலுத்தி பெருநகர சென்னை மாநகராட்சியின் வளர்ச்சி திட்டப் பணிகளில் பங்காற்றிட வேண்டும் என பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர்.தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு: துணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**